[1983 பிப்ரவரி 10

வேலாயுதம் பாளையத்திலிருந்து நொய்யல் வரையுள்ள சாலையைச் செப்பனிடும் திட்டம்.

குறுகிய கால வினா எண் 4— திரு எம். சின்னசாமி திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கரூர் வட்டம், வேலாயுதம்பாளையத்திலிருந்து நொய்யல் வரை உள்ள சாலையை விரிவுபடுத்தி செப்பனிட வேண்டுமென்று அரசுக்குக் கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:

(அ) வேலாயுதம்பாளையம், நொய்யல் சாலையை மேம் படுத்துவதற்கான செயற் குறிப்பு அரசுக்கு வந்தது.

(ஆ) இச் செயற் குறிப்பு ஆய்வு செய்யப்பட்டு 1983–84-ம் ஆண்டில் கரும்பு சாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளவிருக்கிற சாலைப் பணிகளில் இதனையும் சேர்த்துக் கொள்ளுமாறு சர்க்கரை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டு உள்ளார்.

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சாலை ஏற்கெனவே 15 ஆண்டுகளுக்கு முன்பு பழுது பார்க்கப்பட்டது. அது ஈரோடு, பெரியார். சேலம் போன்ற மாவட்டங்களை இணைக்கின்ற சாலையாகும். அதற்குப் பக்கத்திலே இருக்கின்ற புகளூர் சர்க்கரை ஆலைக்கு கரும்பை வண்டிகள் மூலம் எடுத்துச் செல்லப்படுவது மற்றும் டிராக்டர்கள் செல்வது ஆகியவை அந்தச் சாலை வழியாகத் தான். அப்படிப்பட்ட ஒரு முக்கியமான சாலை இப்போது போக்குவரத்துக்கு லாயக்கு இல்லாமல் இருக்கின்றது. பல்வேறு சந்தர்ப்பங்களில் அது பற்றி நெடுஞ்சாலைத் துறை அமைச்சரிடம் மனு கொடுத்திருக்கிறேன். எனவே அதனை விரைவில் சீராக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில்தான் 1983–84 ஆம் ஆண்டில் இது சேர்க்கப் பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, அந்தப் பகுதியிலே உள்ள விவசாயிகள் எல்லாம் வேலாயுதம் பாளையத்திலிருந்து நொய்யல் வரையுள்ள சாலை களில் ஆங்காங்கே கரும்புச் சக்கைகளைப் போட்டு போக்கு

வரத்துக்கு இடைஞ்சல் செய்கிற அளவில் இருக்கின்றது. எனவே அவ்வாறு கரும்புச் சக்கை போடப்படுவது அப்புறப்படுத்தப்படுமா அதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, கேள்வி சாலையைப் பற்றியது.

திரு. எம். சின்னசாமி : தலைவர் அவர்களே, இந்தச் சாலைக்கு என்று எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, ரூ. 32 இலட்சம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக் குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. தகவல் கோரல்.

(அ) பார்வையாளர்கள் மாடம்.

(முற்பகல் 10.30)

திரு. பாபு ஜனார்த்தனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் திடீர் என்று பார்வையாளர்கள் காலரியில் பாஸ் ஏற்பாடு செய்யவில்லை. நாங்கள் எல்லாம் நிறைய பேர்களை, மகளிர்களை அழைத்துக் கொண்டு வந்து இருக்கிறோம். அவர்கள் வெளியே காத்துக்கொண்டிருக்கிறார்கள். அது மட்டும் அல்ல. அங்கே மின்சார பேன்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. மின்சாரம் இல்லாத இந்த நேரத்தில் இப்படி ஆட்கள் இல்லாத அங்கே பேன்கள் ஓடுவது அவசியம் தானா என்று கேட்கவிரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேன்கள் ஓடுவதை நிறுத்திவிடலாம்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றப் பகுதி கலவரப் பகுதி என்று அறிவிக்கப்பட்டிருக்கிறதா என்று தெரியவில்லை ....